[*1995 ஏப்ரல் 10*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி *(*)* இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

ராஜிநாமா செய்வதாகத் தெரிவித்த சில காங்கிரஸ் உறுப்பினர்கள் அவைக்கு வந்திருப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்)*

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் இரண்டு ஆண்டு காலமாக—பேரவைத் தலைவர் அவர்களால்— ஜனநாயக முறையில் இங்கே அங்கத்தினர்கள் செயல்பட முடியவில்லை என்று சொன்னார்கள். எந்தத் தலைவரைக் கேட்டு சொல்லுவது என்று அவர்களுக்குப் புரியவில்லை. இப்போது வட நாட்டில் இருக்கிறவரைப் போய் கேட்டு வருகிறோம் என்று சொன்னார்கள். ராஜினாமா செய்கிறோம் என்று...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது வேண்டாம். இது ஜனநாயக முறைப்படி நடக்கிறது என்பது ஊர், உலகத்திற்கு எல்லோருக்கும் தெரியும்.*

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதாவது இங்கே ஜனநாயகம் இருக்கிறது என்று வந்திருக்கிறார்களா; அல்லது எதை நம்பி இங்கே வந்திருக்கிறார்கள் என்று நான் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)